2017 ஜூலை 13]

மற்றும் tex venture capital fund *ஆகியவற்றிற்கு நிதி உதவி வழங்கப்படும். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சரவணன் அவர்கள்.*

திரு. எஸ்.எஸ். சரவணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 198, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

198—

மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

***5118—திரு. வி. ராதாகிருஷ்ணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதி, மயிலாடுதுறை பெரியார் மருத்துவமனையைத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கையின்படி, மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு இந்த ஆண்டு, 28 கோடியே 70 இலட்சம் ரூபாய் சிறப்பு நிதியாக ஒதுக்கப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்பார்க்கின்ற புதிய கட்டடங்கள் மற்றும் உபகரணங்கள் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு

மேம்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்கள்.

திரு. வி. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தாழ்ந்து கிடந்த தமிழகத்தைத் தரணி போற்றும் திட்டங்களால், தலைநிமிரச் செய்திட்ட தனிப் பெரும் தலைவியாம், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை, அரசு பெரியார் மருத்துவமனை சுமார் 137 ஆண்டுகள் பழமைவாய்ந்த மருத்துவமனையாகும். தற்போது இம்மருத்துவமனை நாகப்பட்டினம் மாவட்டத்தில் இரண்டாவது பெரிய மருத்துவமனையாக, 324 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகின்றது. இம்மருத்துவமனை மயிலாடுதுறை தொகுதிக்கு மட்டுமல்லாது; பூம்புகார் மற்றும் சீர்காழி தொகுதிகளைச் சேர்ந்த மக்களும் பயன்பெறும் மிக முக்கியமான ஒரு மருத்துவமனையாக இருக்கிறது. இம்மருத்துவமனையில் தினந்தோறும் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட புற நோயாளிகளும், 275–க்கும் மேற்பட்ட உள் நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். தினந்தோறும் 10–க்கும் மேற்பட்ட பிரசவங்கள் நடைபெற்று வருகின்றன. தமிழ்நாட்டிலேயே அதிக பிரசவங்கள் நடைபெறும் மருத்துவமனையில், மயிலாடுதுறை அரசு பெரியார் மருத்துவமனை முதலிடத்தில் உள்ளது.

நாகப்பட்டினம் மாவட்டத்தில், மயிலாடுதுறை மிக முக்கியமான நகரமாகும். நவக்கிரக ஸ்தலங்களின் மையப் பகுதியாக மயிலாடுதுறை இருப்பதால், பொது மக்கள் தினந்தோறும் அதிகமாக வந்து செல்கின்றனர். அதனால் அந்தப் பகுதியில் அடிக்கடி சாலை விபத்துகள் ஏற்படுகின்றன. இம்மருத்துவமனைக்கு

2017 ஜூலை 13]

வரும் நோயாளிகள் இங்கு ஸ்கேன் வசதியில்லாத காரணத்தால், திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி அல்லது தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரிக்குச் சென்று ஸ்கேன் எடுத்துவருவதால், பெரும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். இதனைத் தவிர்க்கும் பொருட்டு, மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சிறப்புத் திட்டத்தின்கீழ், MRI Scan, CT Scan மற்றும் கட்டடங்கள் கட்டித்தர மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தொடர்ந்து நேரிலும் தொகுதியின் நலன் கருதி, இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி வருகிற காரணத்தால், துறைரீதியாக ஆய்வு செய்யப்பட்டது. மயிலாடுதுறையிலிருந்து, திருவாரூர் மருத்துவமனைக்குச் சென்றுதான் ஸ்கேன் எடுக்க வேண்டிய நிலை இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். இதையெல்லாம் மனதிலே வைத்துக்கொண்டு, அன்றைக்கு வெளியிடப்பட்ட அறிவிப்புகள் இல்லாமல், இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் புதியதாக ஒப்புதல் பெற்றிருக்கிறோம். இந்த ஆண்டு அங்கு 4 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவிலே CT Scan வழங்கப்படும் என்ற நல்ல செய்தியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நாகப்பட்டினம் மருத்துவமனைக்கு MRI Scan ஏற்கெனவே வழங்கப்பட்டிருக்கிறது. அதை விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். மேலும், அங்கு அதிகமான பிரசவங்கள் நடைபெறுவதாக இப்போது நீங்கள் குறிப்பிட்டிருக்கின்றீர்கள். அதற்காக 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில், Centre of Excellence for Maternity Service, என்ற வகையில் மகப்பேறு ஒப்புயர்வு மையமும் வழங்கப்படும். அதோடு சேர்த்து Infertility Center— அதாவது, குழந்தை இல்லாத தம்பதிகளுக்காக புதியதாக நாம் அறிவித்திருக்கின்ற கட்டணமில்லாத கருத்தரிப்பு மையமும் மயிலாடுதுறையிலே ஏற்படுத்தப்படும். ஆக, தாங்கள் கேட்ட அத்தனை கோரிக்கைகளையும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இப்பொழுது, இந்த ஆண்டிலே செய்து கொடுக்கும் என்ற நல்ல செய்தியை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தங்களுக்கு மீண்டும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்கள்.

திரு. வி. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்டதும் கொடுக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை அவர்கள்.

திரு. S. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் அரசு மருத்துவமனையினுடைய தரத்தை உயர்த்தும் வகையிலும், அந்த மருத்துவமனைக்குக் கூடுதல் வசதிகள் ஏற்படுத்துகிற வகையிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன்கீழ் ஒரு MRI Scan வசதியை அங்கு ஏற்படுத்திக் கொடுத்ததற்கு முதலிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், இந்த நேரத்திலே நான் என்னுடைய தொகுதி மக்கள் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நேன்றைக்கு முன்தினம் கிடைத்த தகவலின்படி, மேட்டூர் அரசு மருத்துவமனையில் 27 பேர் காய்ச்சலுக்காக உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகிறார்கள். அவர்களுடைய இரத்தத்தை பரிசோதனை செய்தவகையில், சிலபேருக்கு Dengue positive என்ற result வந்து, அவர்களுக்கு நல்லமுறையிலே சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. S. செம்மலை: நல்ல வேளையாக உயிரிழப்பு எதுவும் இல்லை. நல்ல முறையிலே சிகிச்சை அளிக்கப்பட்டு, சில பேர் வீடுகளுக்குத் திரும்பிக்கொண்டிருக்கிறார்கள். இதில் பிரச்சினை

2017 ஜூலை 13]

என்னவென்றால், மேட்டூர் சுற்று வட்டாரப் பகுதிகளில் இருக்கின்ற கிராமப் பகுதி மக்களுக்குப் போதிய விழிப்புணர்வு இல்லாததால், காய்ச்சல் முற்றிய நிலையில் மருத்துவமனைக்கு வந்து சேருவதன் காரணமாக, சிகிச்சை அளிப்பதில் சிரமம் ஏற்படுகிறது. எனவே, அந்தக் குறையைப் போக்குவதற்கு, 'Prevention is better than cure' *என்று சொல்வதைப்போல, இந்த நோயின் தாக்கம் உள்ள அத்தகைய கிராமப் பகுதிகளுக்கு மருத்துவக் குழுக்களை அனுப்பி, சுகாதாரப் பணிகளை முன்கூட்டியே* preventive measures *என்ற அடிப்படையில் செய்தால், அந்த நோயை, அந்தக் காய்ச்சலைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியும். எனவே, அந்த வகையில், மேட்டூரைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளுக்கு மருத்துவக் குழுக்களை அனுப்பி, சுகாதாரப் பணிகளைச் செய்து, அந்தப் பகுதி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி சொன்ன மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அண்ணன் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேட்டூர் பகுதியைப் பற்றி உறுப்பினர் அவர்கள் நேரிலும் என்னிடத்தில் தெரிவித்திருக்கிறார்கள். மேட்டூர், பொள்ளாச்சி, பழநி, உடுமலைப்பேட்டை போன்ற பகுதிகளில்* cluster of fever *பற்றி எங்களுக்கும் தகவல் வந்திருக்கின்றது. எனவே, முழு வேகத்தில், மாண்புமிகு அண்ணன் அவர்கள் தெரிவித்ததுபோல, எங்கேனும் காய்ச்சல் அறிகுறி 3 நபர்களுக்குமேல் தென்பட்டால்கூட, உடனடியாகத் துறை அலுவலர்களுக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும் என்று கிராம சுகாதார செவிலியர்களுக்கு அறிவுறுத்தியிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், நடமாடும் மருத்துவக் குழுக்களையும் முழு வேகத்தில் களத்தில் இறக்கிவிட்டிருக்கின்றோம். இன்றுகூட, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடன், அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைத்து வேகமாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆய்வுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, மேட்டூரிலும் மிகுந்த*

கவனத்துடன், தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள்.

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட துங்காவி, கணியூர், மடத்துக்குளம், கொமரலிங்கம், அமராவதிநகர், அதேபோல, பாப்பான்குளம், வளவாடி, ஜல்லிபட்டி, எரிசனம்பட்டி, செல்லப்பம்பாளையம் ஆகிய 10–க்கும் மேற்பட்ட பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. குறிப்பிட்ட பகுதியில் இருக்கிற அரசு மருத்துவமனையில், அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்கள் மட்டும்தான் வைத்தியம் பெற வரவேண்டும் என்று ஏதேனும் விதிமுறைகள் உள்ளனவா என்று அறிய விரும்புகிறேன். ஏனென்று கேட்டால், எரிசனம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அருகில் இருக்கின்ற உடுக்கம்பாளையத்தில் வசிக்கின்ற மக்களுக்கு, எரிசனம்பட்டிக்கு செல்வதற்குத்தான் பேருந்து வசதி உள்ளது. ஆனால், அந்தப் பகுதி மக்கள் எரிசனம்பட்டியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வைத்தியத்திற்காகச் சென்றால், "நீங்கள் இங்கு வரக் கூடாது; செல்லப்பம்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குத்தான் செல்ல வேண்டும்" என்று அங்குள்ள மருத்துவர்கள் தெரிவிக்கின்றார்கள். அதேபோன்று, செல்லப்பம்பாளையத்தில் செயல்படுகின்ற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு, அருகில் இருக்கின்ற கோவை மாவட்டம், நல்லூர் பகுதியில் இருக்கின்ற மக்கள் சிகிச்சைக்காக வந்தால், "நீங்கள் இங்கு வரக் கூடாது; கஞ்சம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குத்தான் செல்ல வேண்டும்" என்று அங்குள்ள மருத்துவர்கள் சொல்கிறார்கள். ஆகவே, இதுபோன்ற விதிமுறைகள் ஏதேனும் இருந்தால், அதைத் தளர்த்தி, மக்களுக்குத் தேவையான மருத்துவ சேவைகளைத் தங்கு தடையின்றி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மடத்துக்குளம் புதிய வட்டத்தில் இருக்கின்ற மருத்துவமனையை அனைத்து வசதிகளுடன்கூடிய தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும். இன்னும்

2017 ஜூலை 13]

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், இந்த மருத்துவமனை NH 209–ல் அமைந்திருக்கிறது. அதில் விபத்து சிகிச்சை மையம் இல்லை. அதையும் அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோன்று, இன்னும் பழனி, உடுமலை, மடத்துக்குளம் ஆகிய பகுதிகளிலும் டெங்கு காய்ச்சல் தொடர்ந்து பரவிக்கொண்டிருக்கிறது. அதைத் தடுப்பதற்கான முழு முயற்சிகளையும் மேற்கொண்டு, அந்த நோயைத் தீர்க்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மடத்துக்குளம் தொகுதியிலுள்ள மருத்துவமனையைத் தரம் உயர்த்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் தொடர்ந்து வலியுறுத்தி, நானும் அங்கு நேரடியாகச் சென்று ஆய்வு செய்து, அது தற்போது தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது என்ற செய்தியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைத் தொடர்ந்து, தாங்கள் குறிப்பிடுகின்ற வசதிகளையும் செய்து கொடுக்க அரசு தயாராக இருக்கிறது.

மேலும், உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோன்ற எல்லை வரையறை–அதாவது, ஒரு இடத்தில் உள்ள நோயாளி இன்னொரு இடத்திலுள்ள மருத்துவமனைக்கு வரக்கூடாது என்பது போன்ற அறிவுறுத்தல் நிச்சயமாக எந்த இடத்திலும் இல்லை. ஆனால், ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் ஒரு எல்லை வரையறுக்கப்பட்டிருக்கிறது. அப்படி எதற்காக வரையறுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், குறிப்பிட்ட எல்லைக்குள் வசிக்கும் எவர் ஒருவருக்கும் மருத்துவ சேவை விடுபட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான், மக்களுடைய நலனுக்காகத்தான், அப்படி எல்லை வரையறுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மக்களின் விருப்பத்திற்கேற்ப, வசதிக்கேற்றாற்போல் அதை மாற்ற வேண்டும் என்று கோரிக்கை வைத்தால், உடனடியாக easy access என்ற வகையில், அருகில் இருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சை

பெறும்வகையில், உறுப்பினரின் கோரிக்கைக்கேற்ப உடனடியாக மாற்றியமைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

காய்ச்சல் குறித்து உறுப்பினர் அவர்கள் கோரிக்கை எழுப்புவதற்கு முன்பே, நானாகவே அவருடைய சட்டமன்றத் தொகுதியிலுள்ள பகுதிகளையும் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். அதைத் தடுப்பதற்கு வேகமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. மாணிக்கம் அவர்கள்.

திரு. கி. மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கக் கடலோரம் சந்தனப் பேழையிலே துயில் கொண்டிருக்கும் தங்கத் தாரகை, நாங்கள் அனுதினமும் வணங்கும் எங்கள் குடும்ப தெய்வம், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன்.

இதய தெய்வம் அம்மா அவர்களால் அடையாளம் காட்டப்பட்டு, இரண்டு முறை தமிழகத்தில் அம்மா அவர்களின் நல்லாட்சியை நடத்திய மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் ஐயா, திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களையும் வணங்குகிறேன்.

மதுரை மாவட்டம், சோழவந்தான் சட்டமன்றத் தொகுதி, வாடிப்பட்டி அரசு மருத்துவமனையில் பிரசவத்திற்கு பின்பு Post operation ward இல்லாத காரணத்தால், பொது ward–லே பிரசவமான பெண்களை தங்க வைக்கின்றார்கள். எனவே, அவர்களுக்கென்று தனியாக ஒரு குளிர்சாதன வசதியுடன்கூடிய Post operative ward ஒன்றை அமைத்துத் தரவேண்டும். நான்கு வழிச் சாலைக்கு அருகில் அந்தப் பகுதி இருப்பதால், அதிகமான விபத்துகள் ஏற்படுகின்றன. அந்தத் தொகுதியில் இது ஒரேயொரு மருத்துவமனையாக இருக்கின்ற காரணத்தினால், அதிகமான பிணங்கள் அந்த மருத்துவமனைக்குக் கொண்டு வரப்படுகின்றன. தற்போது, அங்கு இருக்கக்கூடிய பிணவறைக் கட்டடம் மிகப் பழமையானதாக, ஒரு சிறிய கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றது. எனவே, குளிர்சாதன வசதியுடன்கூடிய, நவீன வசதிகளுடன்கூடிய

2017 ஜுலை 13]

பிணவறைக் கட்டடம் ஒன்றும் அமைத்துத் தரவேண்டும். மேலும், அங்கே சிறப்பு அறுவை சிகிச்சை மருத்துவரும், எலும்பு முறிவு மருத்துவரும் இல்லாத நிலை இருக்கின்றது. எனவே, அங்கு சிறப்பு அறுவை சிகிச்சை மருத்துவர் ஒருவரையும்; எலும்பு முறிவு மருத்துவர் ஒருவரையும் நியமனம் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிறைய கோரிக்கைகளைக் கேட்டிருக்கின்றார். அதில், அவர் முதலாவதாகக் குறிப்பிட்ட Postnatal ward–பிரசவ பின் கவனிப்பு அறை இந்த ஆண்டு வழங்கப்படும் என்ற நல்ல செய்தியை தெரிவித்துக்கொள்கிறேன். மற்ற கோரிக்கைகளை படிப்படியாக அரசு ஆய்வு செய்து, நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் தமிழகத்தின் பல பகுதிகளுக்குச் சென்று, காய்ச்சல் அறிகுறிகளை முன்கூட்டியே அறிந்து, அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். இப்பொழுது எங்களுடைய மாவட்டத்தில் பொள்ளாச்சி, ஆனைமலை, கிணத்துக்கடவு, மதுக்கரை வரையிலான கேரள மாநில எல்லைப் பகுதியிலே வாழ்கிற நம்முடைய மக்கள், இங்கிருந்து கேரளாவுக்கு சென்று வருகிறார்கள்; அதேபோன்று கேரள மக்களும் இங்கே வந்து செல்கிறார்கள். இதுபோன்ற காரணங்களாலும் காய்ச்சல் பரவலாக ஏற்படுகிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிகிச்சை அளிக்க, மக்கள் நல்வாழ்வுத் துறைமூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு, Director of Public Health அவர்கள் கடந்த மூன்று நாட்களாக அங்கேயே முகாமிட்டு, சிறப்பான முயற்சிகளைச் செய்திருக்கிறார்கள்.

இருந்தாலும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் வருகின்ற சனி அல்லது ஞாயிற்றுக் கிழமைகளில், ஏதேனும் ஒரு நாளில் பொள்ளாச்சியிலேயே முகாமிட்டு, இதுசம்பந்தமான ஓர் ஆய்வினை நடத்தி, அந்தப் பகுதியிலே காய்ச்சலைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சியிலே இந்தக் காய்ச்சல் அறிகுறி வந்தவுடனேயே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். உடனடியாக பொது சுகாதாரத் துறை இயக்குநரை அங்கு அனுப்பி, ஒரு நாள் முழுவதும் அவர் அங்கு முகாமிட்டு, ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, வேண்டிய அத்தனை பணிகளும் முழுமையாக முடுக்கிவிடப்பட்டிருக்கின்றன. சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெறுகின்ற காரணத்தினால்தான் நானும், அரசுச் செயலாளரும் களத்திற்குச் செல்ல முடியவில்லை. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, காய்ச்சல் பாதிக்கப்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் ஆய்வு செய்து, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 199, மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. உமா மகேஸ்வரி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

199—

குளிர்பதனக் கிடங்கு

***13276—திருமதி கு. உமா மகேஸ்வரி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விளாத்திகுளம் தொகுதியில் தானியப் பயிர்கள் மற்றும் வற்றல் மிளகாய் ஆகியவற்றிற்கு குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?